
சிந்தனைக் கவிஞர்
கவிதாசன் படைப்புலகம்
பன்முக ஆய்வு
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)
தொகுதி - 1
விஜயா பதிப்பகம்
முனைவர் த. விஸ்வநாதன்
முனைவர் ப. ஜெயபால்
முனைவர் ரா. பிரேம் குமார்

| | | |
|---|---|---|
| Title | : | Sindhanai Kavingar<br>Kavidasan Padaipulagam - Panmuga Aaivu<br>(Pannattu Karutharanga Aaivukovai)<br>Part - I |
| Language | : | Tamil |
| Edition | : | June 2025 |
| Editors | : | Dr. D. Viswanathan, Dr. P. Jayapal and<br>Dr. R. Prem Kumar |
| Publisher | : | Vijaya Pathippagam<br>20, Raja Street, Coimbatore - 641 001.<br>Ph. : 0422 - 2382614 |
| Printing | : | PeeVee Graphics<br>Coimbatore - 641 001. |
| Price | : | Rs.375/- |

---

| | | |
|---|---|---|
| நூல் | : | சிந்தனைக் கவிஞர்<br>கவிதாசன் படைப்புலகம் - பன்முக ஆய்வு<br>(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)<br>தொகுதி - 1 |
| பதிப்பு | : | ஜூன் 2025 |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் த. விஸ்வநாதன், முனைவர் ப. ஜெயபால்<br>மற்றும் முனைவர் ரா. பிரேம் குமார் |
| வெளியீடு | : | விஜயா பதிப்பகம்<br>20, ராஜ வீதி, கோயம்புத்தூர் - 641 001.<br>தொலை பேசி : 0422-2382614 |
| பக்கங்கள் | : | 376 |
| நூலின் அளவு | : | டெம்மி 1/8 |
| அச்சிட்டோர் | : | பி வி கிராபிக்ஸ்<br>கோயம்புத்தூர் - 641 001. |
| விலை | : | ரூ.375/- |

ISBN : 978-81-9850437-1

31. சமகாலச் சிந்தனைகளைக் கவிதை வழி வெளிப்படுத்துதலில் கண்ணதாசனும் கவிதாசனும் – ஓர் ஒப்பீடு 177
**முனைவர் சு. சதீஷ்குமார்**

32. பத்திரிகைச் செய்திகளில் கவிதாசன் உரைகள் 183
**முனைவர் த. சத்தியசீலன்**

33. சிந்தனைக் கவிஞனல்ல (நீ) சிந்தித்தக் கவிஞன் 188
**முனைவர் ஆ. சந்திரசேகர்**

34. கவிதாசனின் முன்னேற்றச் சிந்தனைகள் 192
**முனைவர் க. சந்திரசேகரன்**

35. கவிதாசன் கவிதைகளில் தன்னம்பிக்கைச் சிதறல்கள் 197
**பேரா. சா. சரவணக்குமார்**

36. கவிஞர் கவிதாசன் கவிதைகளில் தன்னம்பிக்கை 201
**முனைவர். ச. சரவணத்தாய்**

37. கவிதாசன் கவிதைகளில் சமூக நோக்கு 207
**முனைவர் து. சவிதா**

38. கவிதாசன் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் 217
**திருமதி சு.சாந்தி**

39. வலிகளுக்கு வழி சொன்ன பெருந்தகையின் செதுக்கல்கள் 221
**முனைவர் ம. சித்ரகலா**

40. இரண்டு நூற்றாண்டுகளின் இனிய கொடைமை 230
**முனைவர் சி. சித்ரா**

41. கவிதாசன் படைப்புகளில் வெற்றி 239
**சு. சிவசுப்பரமணி**

42. கவிஞர் கவிதாசன் கவிதைகளில் மேலாண்மை கருத்துக்கள் 245
**திரு. சு. சிவப்பிரகாஷ்**

43. கவிஞர் கவிதாசன் படைப்புகளில் மனிதநேயம் 251
**முனைவர் ம. மோட்ச ஆனந்தன்**

44. கவிதாசன் கவிதைகளில் மனிதவள மேம்பாட்டுச் சிந்தனைகள் 255
**முனைவர் சா. யமுனாதேவி**

45. வாகை சூட வா 263
**ந. யுவராணி**

46. உடல் – உள்ளம் – செயல் – வெற்றி கவிதாசன் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள் 269
**முனைவர் த. யுவராஜ்**

# 39 வலிகளுக்கு வழி சொன்ன பெருந்தகையின் செதுக்கல்கள்

முனைவர் ம. சித்ரகலா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி.

## முன்னுரை

வாழ்க்கை வாழ்வதற்கே! என்ற உண்மையை உணராத மனிதர்கள் கோடி. இந்த உலகில் இறைவன் நம்மை படைத்தும், இன்ப துன்பங்களைக் கொடுத்தும், அவற்றை நம்மால் கடக்க முடியும் என்ற ஆற்றலைத் தந்தும் இருப்பதன் காரணம் நாம் எப்படி வாழ்கிறோம் என்பதைப் பார்த்து இன்புறவே எனலாம். அதை உணராத மனிதர்கள் வாழ்க்கையில் ஏற்படும் சிறு சிறு இன்னல்களைக் கடக்க முடியாமல் மனவேதனைப்படுவதும், துவண்டு போவதும், நம்மால் இந்த உலகில் நல்ல வண்ணம் வாழ முடியாது எனத் தன்னையே மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு சிந்திப்பதுமாக இருக்கின்றனர். அவ்வண்ணம் வாழ வழி அறியாமல் வலிகளோடு வீழலாம் என்பவர்களுக்குக் கவிஞர் கவிதாசன் அவர்கள் வாழவழி சொல்தோடு, வாழ்ந்து காட்டவும், இலக்கை அடையவும், சாதனை புரியவும் வழிவகை செய்கிறார். அவருடைய வாழ்க்கை அனுபவங்களும், வாசகங்களும், கவிதைகளும், அனைவரையும் சிந்திக்க வைக்கும் பேச்சும் இன்றைய இளைஞர்களுக்கு விடிவெள்ளி எனலாம். இன்றைய இளைஞர்கள் பெரும்பாலானோர் ஊடகங்களில் மெய்மறந்து தன் நிலை மறந்தும், தன் திறன் மறந்தும் இருக்கின்றனர். இப்படிப்பட்ட இளைஞர்களின் நிலையை மாற்றவும், தோள் கொடுக்க ஒரு நல்ல நண்பன் இன்றியும், தேவையான போது கைக்கொடுக்க நல்ல சகோதரன் இன்றியும், பாசத்தோடு பார் ஆள வழி சொல்ல நற்பண்பாளர் இன்றியும், இருக்கும் இன்றைய இளைய சமுதாயத்திற்குக் கவிஞர் கவிதாசனின் மொழிகளும் எழுத்துக்களும் எழுற்சி ஊட்டக்கூடியன என்று சொன்னால் அது மிகையாகாது. அவ்வகையில் இன்றைய தலைமுறையை நல்ல வண்ணம் வாழ வைக்கும் சமுதாயச் சிற்பியாகக் கவிதாசன் விளங்குவதால் அவரின் சிந்தனைகளை ஆராய்வது இன்றைய தலைமுறையினருக்கு இன்றியமையாத தன்மையுடையது என்ற நோக்கத்தில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**குடிப்பிறப்பு**

பலருக்கு ஏழையாகப் பிறந்து விட்டோம் என்ற ஏக்கமும், தன் குடும்பத்தில் யாரும் பெரிய பதவிகளில் இல்லை என்ற வருத்தமும் கொண்டு, தாழ்வு மனப்பான்மையோடு இருப்பர். ஏழையாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய பெரிய சொத்து தன்னைத்தான் நம்பும் தன்னம்பிக்கை. இதனைக் கவிஞர், தன்னம்பிக்கையோடு எழுந்து நின்றால் இமயம் கூட இடுப்பளவுதான் என்றும் தன்னம்பிக்கை இருந்தால் ஒற்றைச் சிறகிலும் உயரப் பறக்கலாம் என்றும், (வெற்றிப் பூக்கள், ப. 57) வெற்றிக் கூட்டணி என்ற கவிதையில் குறிப்பிடுகின்றார். சொல்வது யாருக்கும் எளிமை. வாழ்ந்து பார்த்தால் தான் அதன் வலி தெரியும் என்று சொல்பவர்களுக்குத் தன் வாழ்க்கையையே சொல்கிறார் கவிஞர். கோவை மாவட்டத்தில் சிறிய கிராமமான கந்தேகவுண்டன் சாவடிதான் எனது ஊர். பெற்றோர் சுப்பண்ணன்-மயிலாத்தாள். எளிய விவசாயக் குடும்பம். வீட்டில் கடும் வறுமை. இதனால், பிழைப்புத் தேடி ஆனைகட்டி அருகேயுள்ள அட்டப்பாடிக்கு விவசாயத் தொழிலுக்குச் சென்றோம். அங்குத் தமிழ்ப் பள்ளிக்கூடம் கிடையாது. இதனால் திண்ணைப்பள்ளியில், சுப்பிரமணியம் என்ற ஆசிரியரிடம் 5-வது வரை படித்தேன். பின்னர், கோவை சின்னதடாகம் அரசு உயர்நிலைப் பள்ளியில், இலவச விடுதியில் தங்கி 10-ம் வகுப்பு வரை படித்தேன். காலையில் சோளக்கஞ்சி, கோதுமை கஞ்சிதான் கொடுப்பார்கள். அது சுத்தமாகவும் இருக்காது. போதவும் செய்யாது. சாப்பாடு போடுகிறார்களே என்பதற்காகவே என்.சி.சி.யில் சேர்ந்தேன். (இந்து தமிழ் இசை, பிப். 1, 2019) என்று கூறும்போது கவிஞர் தன் வாழ்வில் நடந்த எவற்றையும் மறைக்கவில்லை. சாப்பாடு போடுகிறார்கள் என்பதற்காக என்.சி.சி.யில் சேர்ந்தேன் என்றார். பசிவந்திட,

> **மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
> **தானம் தவர் உயர்ச்சி தாளாண்மை – தேனின்**
> **கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்**
> **பசி வந்திடப் பறந்து போம்** (நல்வழி, பா. 26)

என்கிறார் ஔவைப்பிராட்டி. ஆனால் நம் கவிஞர் உணவு கொடுக்கிறார்கள் என்பதற்காக எந்த ஒரு தவறான இடத்திற்கும் செல்லவில்லை. தேசிய மாணவர் படையில் சேர்ந்த அவரின் செயல் அவரின் முன்னேற்றச் சிந்தனையும் நல்வழியில் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தையும்

எடுத்துக்காட்டுகிறது. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பார்கள். அதுபோல, தன் சிந்தனையைப் படிக்கும் காலத்திலேயே நற்பணி செய்வதில் செலுத்தியுள்ளார். மேலும் அனைத்து மாணவர்களுக்கு இருக்கும் மனநிலை போல தானும் ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாடத்தைச் செய்யாததால் ஆசிரியர் பெரியசாமி, கவிஞரை 50 திருக்குறள்களை மனப்பாடம் செய்துவருமாறு கூறினார். நானும் மனப்பாடம் செய்தேன். அப்போது நடைபெற்ற திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் பங்கேற்று, 50 திருக்குறள்களையும் ஒப்புவித்து பரிசு பெற்றேன். ஆசிரியர் அளித்த தண்டனை வரமானது (மேலது) என்றார். கிடைத்த வாய்ப்பைத் தனக்கான தகுதியாகப் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் இன்றைய இளைஞர்களில் நிலையைக் கவிஞர் முகமது மேத்தா,

வரம் கொடுக்கும் தேவதை /வந்தபோது தூங்கினேன்

வந்தபோது தூங்கி விட்டு /வாழ்க்கையெல்லாம் ஏங்கினேன்

என்று குறிப்பிடுவது போல தனக்கான வாய்ப்பு வரும் வரும் என்று காலத்தின் அருமை அறியாது சோம்பேறித்தனமாக இருக்கின்றனர். ஆனால் கவிஞர் அதற்கு இடம்கொடுக்காமல் தன்னிடம் பேச்சுத்திறன் உள்ளது என்றும் எழுதும் ஆற்றல் உண்டு என்றும் தன்னை ஊக்கப்படுத்தி முன்னேற தொடங்கினார். இன்றைய இளைய தலைமுறையினர் கற்றுக் கொள்ளக்கூடிய பெரிய பாடம் இதுதான். தன்னிடம் உள்ள திறமையைத் தான் அறிந்து கொண்டு, தரணி போற்ற வாழ்ந்து காட்டிய கவிஞரை முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தன்னுள் வளர்த்துக் கொண்டால் சாதனை புரியலாம். வாழ்வில் உயரலாம். உங்களையும் இந்த உலகம் திரும்பிப்பார்த்துக் கொண்டாடும் என்பது திண்ணம்.

**மனம் - தாவுதலும் மயங்குதலும்**

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்றார் ஔவைப்பிராட்டி. உலக உயிர் வகையை ஆறாகப் பகுத்தார் தொல்காப்பியர். பகுத்துப்பார்க்கும் அறிவு மனிதனுக்கு இருப்பதாலே மனிதனைப் பகுத்தறிவாளன் என்றனர். ஆனால், பகுத்துப்பார்க்கும் மனிதன் மட்டுமே நாம் எப்படி முன்னேறுவது, நாம் எதுவாக ஆகப்போகிறோம் என்று யோசிப்பான். ஐந்தறிவு படைத்த புலி நாம் பூனையாகிவிடுவோமோ என்று

கண்டிப்பாக யோசிக்காது. அப்படிப்பட்ட தன்னடக்கமில்லா தாவுதலையுடைய மனித மனம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை,

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே

என்கிறார் அகத்தியமுனி. இதனை உணர்ந்த பாரதி,

விசையுறும் பந்தினைப்போல் உள்ளம்
வேண்டியபடி செல்லும் உடல் கேட்டேன் (பாரதியார் கவிதைகள், ப. 28)

என்றார். ஆம். நாம் வேண்டுவன எல்லாம் உயர் சிந்தனைதான். ஆனால் மனம் ஒரு குரங்கு. அது நம்மையும் நம்மிடம் உள்ள திறனையும் ஆராயாமல் பலரையும் பார்க்கும், அவர்களைப்போல் வாழத் துடிக்கும். சில நேரங்களில் தன்னிடம் உள்ள உயர்வு என்ன என்பது புரியாமல் பல வழிகளில் திரிந்து வாழ்க்கையையே தொலைத்துவிடும். அப்படிப்பட்ட குழப்பத்திற்கு ஆளாகாமல் கவிஞர் தனக்கான தரத்தைக் கண்டுகொண்டு செயலாற்றிய விதத்தைக் கூறும்போது, 1982-ல் வானம்பாடி கவிதை இயக்கத்தைச் சேர்ந்த அரங்கநாதன், இரவிலே வாங்கினோம், இன்னும் விடியவேயில்லை, சுதந்திரம் என்று எழுதியிருந்தார். அந்தக் கவிதைக்கு மறுப்புக் கவிதை எழுதி, ஆனந்த விகடனுக்கு அனுப்பி வைத்தேன். விடியல் என்பது வெளியில் இல்லை. உன் விழியில் உள்ளது என அந்தக் கவிதையை முடித்திருந்தேன். ஆனந்த விகடனில் இது பிரசுரமானதுடன், ரூ.50 பரிசு அனுப்பி வைத்தனர். சுஜாதா-வைப்போல கவிதா என்ற பெயரில் அதை எழுதியிருந்தேன். எனினும், வகுப்பு, கல்லூரியைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். தமிழாசிரியர் நஞ்சுண்டன் ஆனந்த விகடனை வகுப்புக்குக் கொண்டுவந்து, மாணவர்களுடன் சேர்ந்து பாராட்டினார் அன்றுமுதல் தனக்கான தரம் ஒன்றை அறிந்தார் கவிஞர்.

ஒரு செயல் செய்யும் போது தயக்கம் ஏற்பட்டாலோ, புகழ்வரும் போது மயக்கம் ஏற்பட்டாலோ அது நம் முன்னேற்றத்திற்கு தடைக்கல் என்பதை உணர்ந்து தனது அடுத்த செயலை உடனே தொடங்கினார். 1982-ல் பாரதியார் நூற்றாண்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் எனக்கு முதல் பரிசு. கவிதைக்குத் தாசனான முருகேசனுக்கு முதல் பரிசு

என்று அறிவித்தார்கள். அப்போதிருந்து எனது பெயரை கவிதாசன் என மாற்றிக் கொண்டேன். தொடர்ந்து நிறைய கவிதைகள் எழுதினேன். என்ற கவிஞர் மனதைப் பக்குவப்படுத்திக்கொண்டார். தன்னை உலகமே திரும்பிப்பார்க்கச் செய்தார். இன்று 70ற்கும் மேற்பட்ட புத்தகங்கள் அவருடைய மனதில் பூத்த புத்தகங்களாக, சாதிக்கத் துடிக்கும் ஒவ்வொருவர் கைகளிலும் தவழ்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகவே இளைய சமுதாயமே, நீங்கள் உங்கள் மனதைப் பக்குவப்படுத்தி, தெளிவான சிந்தனையுடன், உயர்வான எண்ணங்களைச் செயல்களாக்கி விண்ணை முட்டும் வித்தகர்களாக, மண் போற்றும் மகான்களாக வாழ இப்பெருந்தகையின் சிந்தனைகளில் கவனம் செலுத்துங்கள். உங்கள் வாழ்வு வளம் பெரும்.

**விடுதலும் தொடுதலும்**

விடுதல் என்று சொன்னது சோம்பேறித்தனத்தையும், எச்செயலையும் நாளை செய்யலாம் என்ற எண்ணத்தையும், விடிந்தும் விழிக்காது இருப்பதையும் விட்டுவிடலாம். விட்டுவிட்டால் சாதிக்கலாம் என்பதை,

**விதைகளின் விழிகளில்**
**விடியலைக் காண்பவனே**
**வாழ்வாங்கு வாழ்பவன்** (வெற்றிப்பூக்கள், ப.19)

என்கிறார் கவிஞர். தொடுதல் என்பது தனக்கான இலக்கை அடைய செயலாற்றினால் வெற்றிக்கனியைத் தொடலாம் என்பதே கவிஞர் அவர்களின் ஆணித்தரமான கருத்து. படிக்கும் காலத்திலேயே தனக்கான தலைமைப் பண்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் சாதாரண வாழ்க்கையும் சிறப்படையும் என்பதை,

**எப்போதும்! உழைப்பு வீதிகளில் ஓய்வின்றிப் பயணப்படு!**
**உனது திசையே வெற்றியின் திசையாகும்!**
**வெற்று வாழ்க்கையை வெற்றி வாழ்க்கையாக்க**
**கல்வியின் சுடரை உள்ளத்தில் ஏற்று!** (மேலது ப. 31)

என்று குறிப்பிடுகிறார்.

நல்ல தலைமைப் பண்பின் மூலம் நாம் ஒழுக்கத்தை, ஒற்றுமையை, நல்ல நட்பை, சமுதாய உறவை வளர்த்துக் கொள்ள முடியும். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பர். ஐந்தில் வளையாதது ஐம்பதில்

வளையாது என்றும் கூறுவர். ஆக பள்ளிப்பருவத்திலும், கல்லூரிப்பருவத்திலும் நாம் கற்றுக்கொள்ளும் நற்பண்பும், தலைமை பண்பும் நம்மை என்றென்றும் தலைமைப்பண்புள்ள உயர்ந்த மனிதனாக்கும் என்பதைக் கவிஞர், தமிழ் பேராசிரியர் முனைவர் சம்பத்குமார் உதவியுடன், சிந்தனை மன்றம் உருவாக்கி, பல இலக்கிய நிகழ்வுகளை நடத்தினேன். கல்லூரிப் படிப்பு முடித்த பின்னர், சிங்காநல்லூர் லஷ்மி மில்ஸ் ஆலையில் தொழிலாளர் நல அதிகாரியாகப் பொறுப்பேற்றேன். 326 பேர் இன்டர்வியூவில் பங்கேற்றதில், எனது பேச்சுத் திறமையால் நான் தேர்வு செய்யப்பட்டேன் என்றார் கவிஞர். ஆக கல்லூரியில் சிந்தனை மன்றத்தின் பல நிகழ்வுகள் நடத்தியதால் பெற்ற தலைமைப்பண்பும் பேச்சாற்றலும் தனக்கான தொழிலைக் கவிஞருக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறது.

**விடியலைத் தேடி விழித்தெழு**

தனிமனித சாதனையில் சமுதாய நோக்கமும், நாட்டின் முன்னேற்றமும் வளரும். சாதனை படைக்க வேண்டும் என்ற இலக்கைக் கையில் எடுத்துக் கொண்டு, உத்வேகத்தில் படித்து முன்னேற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி ஃபுட் பர்த் என்ற திரைப்படத்தை இயக்கி சாதனை புரிந்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற கிஷன்க்கு அப்போது வயது 9 (2005). தமிழில் இப்படத்திற்குச் சாதனை என்று பெயர் (சுயமாக முன்னேறுவது எப்படி, ப. 51). சாதனை புரிய வயது ஒரு தடையல்ல. சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் முதலில் வர வேண்டும், அதோடு தெளிந்த நல் அறிவு வேண்டும். உங்களுக்கு அறிவாற்றல் இருக்குமேயானால் உங்களை உலகம் போற்றி வணங்கும் என்கின்றார் அறிஞர் இங்கர்சால். இதனையே பாரதி, தெளிந்த அறிவும் இடைவிடாத முயற்சியும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்றார். இதனை கவிஞர் கவிதாசன்,

> தெளிந்த நல்லறிவும் தொடர்ந்த / தொய்விலா முயற்சியும் இணைந்தால்
> நலிந்த மனிதன் கூட நாளடைவில் / நல்லாற்றல் பெற்று நானிலத்தில்
> விழிப்புடன் வீறுநடை பயின்று / வெற்றிகளைக் குவிப்பான் விரைந்து

என்றார். சாதனைபுரிய முயற்சியும், நமக்கான திறனை அறிதல், தன்திறனை மேம்படுத்துதல், இலக்கை அடையும்வரை விழிப்புடன் இருத்தல், தெளிவான சிந்தனை திட்டமிடல் இவை வேண்டும்.

**நேர மேலாண்மை**

இன்றைய காலகட்டத்தில் அனைவரும் புலம்பக்கூடிய ஒரு வார்த்தை எனக்கு நேரமே இல்லை. இல்லை என்ற வார்த்தையை நம் அகராதியிலிருந்து தொலைத்து விட்டாலே இருக்கின்றது என்ற வார்த்தை உறுதியாகிவிடும். இன்று உலகமெங்கும் பேசப்படும் சொல் நேரமேலாண்மை (Time Management) மற்றும் மன அழுத்த மேலாண்மை (Stress Management) நேர மேலாண்மையும் மன அழுத்தமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. நேரம் என்பது ஒரு தன்னிகரற்ற செல்வம், இலவசமாக கிடைக்கும் விலைமதிக்க முடியாத சொத்து, அதைச் சரியாகப் பயன்படுத்தாமல் தவற விட்டால் விட்டதுதான். மீண்டும் பெற இயலாது. நேரம் என்பது ஒருவழிப்பாதை. இதற்கு ரீவைண்டிங் கிடையாது. நியாய விலைக்கடையில் வழங்கப்படும் சர்க்கரை போதாத போது வெளிமார்க்கெட்டில் வாங்கிக் கொள்வதை போல நேரத்தை அதிகப்படியாக பெற முடியாது (வாழ்க்கைத்திறன் மேம்பாடு ப. 17) என்பது உண்மை.

நேரத்தோடு, காலம் தாழ்த்தாது செய்யப்படும் வினை சீரான மனநிலையைக் கொடுப்பதோடு செய்யும் செயலும் தெளிவுறும். அதே சமயத்தில் காலம் தாழ்த்தி செய்யப்படும் செயல், அச்செயலை முடிக்க வேண்டும் என்ற பதட்டம் மன அழுத்தத்தைக் கொடுப்பதால்தான், பதறியகாரியம் சிதறும் என்பர். அவசரமாகவும் பதட்டமாகவும் செய்யும் செயல்; சரியாகவோ, தெளிவாகவோ இருக்கும் என்று சொல்ல முடியாது என்பதை,

**ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்**
**கருதி இடத்தாற் செயின்** (குறள். 483)

என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுகிறார். இவ்வாறு எந்த வேலையும் சரியாக நேரம் கருதி செய்ய வேண்டும் என்பதை,

பசிக்கும் போது கிட்டாத உணவு பயன் அற்றது போல, நேரத்தைப் பயன்படுத்தாது இருக்கும் வாழ்நாள் பயனற்றது என்பதை,

**செலவு செய்த செல்வம் வரும்,**
**செலவு செய்த நேரம் வருமா? பணி நேரம் வெற்றியின் நேரம்**
**மணித்துளியும் வேண்டாம் விரயம்** (வெற்றிக்கு மேல் வெற்றி, ப. 29)

என்றும், நேரத்தை சரியாகப் பயன்படுத்தினால் வெல்லலாம் என்பதை, 1. நேரநிர்வாகத் திட்டம் தீட்டுங்கள் 2. ஓய்வு நேரத்தைச் சிந்திக்கப் பயன்படுத்துங்கள் 3. வீண் விவாதத்தைக் தவிர்த்து விடுங்கள் 4. எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருங்கள் 5. வேகமாகச் செயல்படுங்கள் 6. முதல்முறையே முதன்மையாகச் செய்யுங்கள் 7. சக பணியாளர்களின் உதவியைப் பெறுங்கள் 8. மேலதிகாரியின் அறிவுரையையும் வழிகாட்டுதலையும் ஏற்றுக் கொள்ளுங்கள். 9. திறமையைத் தொடர்ந்து வளர்த்துக் கொண்டே இருங்கள் 10. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ளுங்கள் (மேலது. ப. 36) என்று நேரத்தை திட்டமிட்டு செயல்படுத்தினால் சாதனை புரியமுடியும் என்கிறார்.

**மனதிட்பம்**

எந்த ஒரு செயல் செய்யும் போதும் தடைகள் வரும். அந்தத் தடைகளைக் கண்டு சோர்ந்து போகாமல் வெற்றி பெற மன உறுதியோடு போராட வேண்டும் என்பதை,

**என்னடா வாழ்க்கை என்பதற்கல்ல வாழ்க்கை**
**எதிர் நீச்சல் போட்டு நிமிர்ந்து நிற்பதற்கே வாழ்க்கை!**
**ஆயிரம் சவால்கள் அடுக்கடுக்காய் வந்தாலும்**
**துவண்டு போகாமல் துணிந்து நிற்பவனே கைதட்டல் பெறுகிறான்!**

(வெற்றிப் பூக்கள், ப.72)

எனத் துணிந்துநில் என்ற கவிதையில் வெளிப்படுத்துகிறார். அதோடு நம் செயலைச் செய்ய முடியவில்லை என்று மனம் வருத்தப்பட்டு கடுஞ்சொல் பேசாமல் அன்பின்வழி தன் வெற்றியை நிலை நாட்ட வேண்டும் என்பதை,

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று** (குறள். 100)

என்று வள்ளுவப் பெருந்தகையின் கூற்று போலவே கவிஞரும்,

**உங்கள் பேச்சுவெட்டிக் கிழிக்கின்ற**
**கத்திரிக் கோலாக இல்லாமல்**
**கிழிசல்களைத் தைக்கின்ற ஊசியாக இருக்கட்டும்**

என்கிறார். அதேபோல நீங்கள் செய்யும் செயலைப் பார்த்துக் குறை கூறுபவர்களைப் பார்த்து மனம் தளரக்கூடாது என்பதை,

குறை சொல்லுபவர்களுக்கு நன்றி சொல்லுங்கள்
ஏனென்றால் உங்களை நீங்களே செதுக்கிக் கொள்வதற்கு
அவர்கள் உளி கொடுக்கிறார்கள்! ..
உங்கள் வளர்ச்சிக்கு அவர்கள் வழி சொல்கிறார்கள்...
உங்களை நல்வழிப்படுத்த அவர்கள் முயற்சிக்கிறார்கள்...

(வெற்றிப் பூக்கள், ப. 48)

என்று மனம் தளராமல் முன்னேற முயற்சியுங்கள் என்கிறார். எனவே, யார் எதைச் சொன்னாலும் தன் முயற்சியிலிருந்து மனதளர்ச்சி கொள்ளக்கூடாது என்பது விளங்கும்.

**தொகுப்புரை**

முனைப்போடு முன்னேறினால் சாதனையாளர் ஆகலாம் என்பதற்குக் கவிஞர் கவிதாசனின் வாழ்க்கை அனுபவங்களோடு அவரின் கவிதைகளின் வழியும் கட்டுரைகள் வழியும் சமுதாய முன்னேற்றம் அடைய தகுந்த விழுமியங்கள் இக்கட்டுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.